**கவனிக்க.-** *2009.06.26 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1609 - 2009 ජූලි 03 වැනි සිකුරාදා - 2009.07.03**

*1609 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 794 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 795 |

**கவனிக்க.-** (i) பழக்கப்பட்ட யானைகளின் உரிமையாளர்கள் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2009, ஏப்பிறல் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2009, ஏப்பிறல் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) அல்ஹசன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2009, மே 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை – நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பததிர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, யூலை மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, யூன் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந்திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந்திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச்சேவை ஆணைக்குழு

கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் காதி வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிக்கப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர் ஒருவர் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றுள்ள ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதிற்கு மேற்பட்டவராகவும், நல்ல ஒழுக்கமுள்ளவராகவும், இருக்கவேண்டியதோடு, முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டத்தினைப் பற்றிய நல்ல அறிவுடையவராகவும், சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்புமுடையவராகவும், விவாகமான ஒருவருமாக இருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற கால எல்லைக்கு நியமனம் செய்யப்படுவார்.

காதியாக நியமிக்கப்படுபவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பது சட்டரீதியான அவசியமாகும்.

காதி ஒருவருக்கு ரூபா 6,000 மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காகவும் மாதாந்தம் ரூபா 5,000 கொடுப்பனவொன்றும் வழங்கப்படும்.

இவ் அலுவலகத்திலிருந்து பெறப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தினை பூரணப்படுத்தி 2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 3 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ எனக்குக் கிடைக்குமாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

பீ. டபிள்யு. டி. சீ. ஜயதிலக,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம்,
கொழும்பு 12,
2009, யூன் 16.

## அட்டவணை

| | | |
|---|---|---|
| 1. | பதுளை | பதுளை நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட பகுதியில் நிலவும் காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது. |
| 2. | பலப்பிட்டிய மற்றும் அல்பிட்டிய | பலப்பிட்டிய மற்றும் அல்பிட்டிய நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட பகுதியில் நிலவும் காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது. |
| 3. | பேருவளை | களுத்துறை மாவட்டத்தின் பேருவளை பிரதேச செயலகப் பிரிவுக்கான காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது. |
| 4. | கொழும்பு (கிழக்கு) | கொழும்பு (கிழக்கு) புதுக்கடை, கிராண்பாஸ், மாளிகாவத்தை, புனித சென். செபஸ்தியான் வீதி, நியூ பஸார், தொட்டலங்க, கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை, பாதுக்கை, ஹோக்கந்தர, மீகொட, கொடகம, பணாகொட, மாலபே, தலங்கம-வடக்கு, கொட்டியாவத்தை, புத்கமுவ ஆகிய பிரிவுகளுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது. |
| 5. | கொழும்பு (வடக்கு) | கொழும்பு (வடக்கு), கோட்டை, புறக்கோட்டை, மருதானை, சுதுவலை, பொறளை, குப்பியாவத்தை, தெமட்டகொடை, மாளிகாகந்தை, மாதம்பிட்டி, மொடறா, மட்டக்குளி, கொட்டா வீதி, கொலன்னாவை, அங்கொடை மற்றும் வெல்லம்பிட்டி ஆகிய பிரிவுகளுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது. |
| 6. | ஹாரிஸ்பத்து மற்றும் பூஜாபிட்டிய | கண்டி மாவட்டத்தின் ஹாரிஸ்பத்து மற்றும் பூஜாபிட்டிய பிரதேச செயலகப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது. |

7. ஹொறணை — ஹொறணை நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட பகுதியில் நிலவும் காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

8. கரைவாகுப்பத்து (தெற்கு) — (சாய்ந்தமருது) அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

9. கோறளைப்பற்று (வாழைச்சேனை) — மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று கிழக்கு (ஓட்டமாவடிப் பிரதேசம் தவிர) இறைவரிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

10. மன்னார் — மன்னார் மாவட்டத்தின் மன்னார் மற்றும் மாந்தை இறைவரிப் பிரிவிற்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச்சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

11. மாத்தறை — மாத்தறை நீதி நியாயாதிக்கத்துக்குட்பட்ட பகுதியில் நிலவும் காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

12. மாவனல்லை — மாவனல்லை நீதிப் பிரிவிற்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

13. நுவரெலியா — நுவரெலியா நீதிப் பிரிவிற்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

14. சம்மாந்துறை — அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேச சபை இல. 1 உம், இல. 2 உம், மல்கம்பிட்டி, நைனாகாடு, மல்வத்தை, நாவிதன்வெளி, அன்னவிலை ஆகிய பிரதேசங்கள் அடங்கிய சம்மாந்துறை காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

15. தம்பலகாமம் மற்றும் கந்தளாய் — திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம் மற்றும் கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவிற்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

16. திருகோணமலை — திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை நகரம், சுற்றுப்பிரதேசம் மற்றும் முறஹா செயலகப் பிரிவிற்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

17. உடுதும்பர, மத்திய தும்பர மற்றும் பாத்த தும்பர (உடத்தலவின்ன) — கண்டி மாவட்டத்தின் உடுதும்பர, மத்திய தும்பர மற்றும் பாகத்ததும்பர (உடத்தலவின்ன) இறைவரிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக் குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

18. உடுநுவர — கண்டி மாவட்டத்தின் உடுநுவர இறைவரிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

19. வவுனியா — வவுனியா நீதி நியாயாதிக்கத்திற்குட்பட்ட பகுதியில் நிலவும் காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகிறது.

7-111

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

விலைமதிப்புத் திணைக்களம்

**இலங்கை விலைமதிப்புச் சேவையின் வகுப்பு III தரம் II இன் உதவி மாவட்ட விலைமதிப்பாளர் பதவி**

விலைமதிப்புத் திணைக்களத்தில் இலங்கை விலைமதிப்புச் சேவையின் வகுப்பு III தரம் II இன் உதவி மாவட்ட விலைமதிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலில் தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கமைய தயாரிக்கப்பட்டு "செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சு செயலகம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு 2009.07.17 ஆந் திகதியன்று அல்லது இதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை விலைமதிப்புச் சேவையின் உதவி மாவட்ட

விலைமதிப்பாளர் வகுப்பு III தரம் II பதவிக்கான விண்ணப்பங்கள்" என குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்பம் கோரும் அறிவித்தலுக்கமைய அடிப்படை தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் எழுத்து மூலமான பரீட்சைக்குத் தோற்றுமாறு அழைக்கப்படுவார்கள்.

**குறிப்பு**.- (i) விண்ணப்பங்கள் இவ்வறிவித்தலுடன் தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்படாவிடில் நிராகரிக்கப் படும்.

(ii) விண்ணப்பப்படிவம் தபாலில் காணாமல் போய்விட்டதாகவோ அல்லது தாமதமாகிப்போய்விட்டதென்ற குற்றச்சாட்டுக்கள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகள் தங்களுடைய விண்ணப்பப்படிவங்களை கடைசித் தினத்திற்கு முந்திய சில நாட்கள் வரை தாமதப்படுத்தி வைத்திருந்து அனுப்புவது அது அவர்களின் சொந்தப் பொறுப்பில் செய்தமையாகக் கருதப்படும்.

*2.* **சேவைக்கு அமர்த்துவதற்கான நிபந்தனைகளும், சேவை நிபந்தனைகளும்** :

(i) இப்பதவி நிரந்தரமானதாகும். தெரிவுசெய்யப்படுபவர் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகையை செலுத்த வேண்டும். இந்த நியமனம் மூன்றாண்டுகால தகுதிகாண் நிலைக்கு உட்பட்டதாகும்.

(ii) வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் பகுதி I : தொகுதி (IIஅ) பந்தியின் ஆரம்பத்திலுள்ள அரச சேவை நியமனங்களுக் குரிய பொது நிபந்தனைகள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(iii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 07/2007 இற்கமைய, இலங்கை விலைமதிப்புச் சேவையின் தரம் III/II இற்கு நியமனம் செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்கள் நியமனத் திகதி முதல் 05 வருடகாலப் பகுதிக்குள் தாம் சேவையில் இணைந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக அடுத்த அரச கரும மொழி தொடர்பில் நிபுணத்துவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நியமனத் திகதி முதல் 05 வருட காலப்பகுதிக்குள் உரிய அடுத்த அரச கரும மொழிக்கான நிபுணத்துவத்தைப் பெற்றுக்கொள்ளாத உத்தியோகத்தர் களின் சம்பள ஏற்றமானது, தகைமை பெற்றுக்கொள்ளும் வரை பிற்போடப்படும்.

*3.* **சம்பளங்களும் கொடுப்பனவுகளும்**.- 2007.08.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 (IV) இன் MN-5/2006A ஆம் இலக்க சம்பளத் தொகுதி (மாதாந்தம்) (ரூ. 16,720-10x320-11-365-15x450-ரூபா 30,685) இப்பதவிக்கு உரித்தாகும். பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/ 2006 மற்றும் அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய சம்பளம் செலுத்தப்படும். பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/ 2006 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். சம்பள ஏற்றங்களை செலுத்துவதானது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைவதில் தங்கியிருக்கும்.

*4.* **தேவையான தகைமைகள்**.- (i) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ii) சிறந்த நடத்தையும், நல்ல கண் பார்வையும் தேகாரோக்கியமும் உள்ளவராக இருக்க வேண்டும் ;

(iii) 2009.07.17 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். (தாபன விதிக்கோவை பிரமாணங்களின் கீழான ஏற்பாடுகளுக் கமைய அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

(iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெருந் தோட்ட முகாமைத்துவமும் விலைமதிப்பீடும் தொடர்பான விஞ்ஞான மானிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

*5.* **நியமனம் செய்யும் முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்ற திறந்த போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் திறமையின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப் படும். தகைமைபெறும் விண்ணப்பதாரர்களின் அடிப்படைத் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள் :-

(i) ஆட்சேர்ப்புக்கான திறந்த போட்டிப் பரீட்சை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக வளவில் நடாத்தப்படும். இப்பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற அறிவுரைகளுக்கு உட்பட்டு நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்கு உரித்தாகும்.

(ii) திறந்த போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமையின் வரிசை அடிப்படையில் வெற்றிடங்கள் பூர்த்திசெய்யப்படும்.

(iii) காணப்படுகின்ற வெற்றிடங்களில் ஒரு பகுதியை அல்லது அனைத்தையும் பூர்த்திசெய்யாதிருக்கும் அதிகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உண்டு.

(iv) பரீட்சையை நடாத்த முன்னர், நடாத்தும்போது அல்லது நடாத்தியதன் பின்னர் ஆகிய எந்தவொரு சந்தர்ப்பத் திலேனும் யாராயினுமொரு விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தகுதி பெறமாட்டாரென்பது உறுதிசெய்யப்படும் பட்சத்தில் மேலே குறிப்பிடப்பட்ட எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் அபேட்சகர் தன்மையை இரத்துச்செய்ய முடியும்.

மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்ட பின்னர் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையில் இருந்து சேவை நீக்கம் செய்யப்படுவார்.

திறந்த போட்டிப் பரீட்சையின் பாடவிதானம்- இது இரு வினாத்தாள்களை உள்ளடக்கியதாக அமையும்.

**வினாப்பத்திரம் I (காலம் : 30 நிமிடங்கள்)** :

வினாப்பத்திரம் 25 இற்கு மேற்படாத பல் தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். பொதுவாக அவை பெருந்தோட்ட முகாமையும் விலைமதிப்பீட்டு விஞ்ஞானமாணி பாடவிதானம் சம்பந்தமானதாக இருக்கும்.

சித்தியடையத் தேவையான ஆகக்குறைந்த புள்ளிகள் - 50%

***வினாப்பத்திரம் II (காலம் : 45 நிமிடம் முதல் 1 மணித்தியாலம் வரை) :***

வினாப்பத்திரம் பொதுவாக பெருந்தோட்ட முகாமையும் விலைமதிப்பீட்டு விஞ்ஞானமாணி பாடவிதானம் சம்பந்தமான வினாக்களைக் கொண்டிருக்கும்.

சித்தியடையத் தேவையான ஆகக்குறைந்த புள்ளிகள் - 50%

6. **விண்ணப்பதாரிகள் அழைக்கப்படும்பொழுது கீழ்வரும் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கேட்கப்படலாம்** :

(i) பிறப்புச் சான்றிதழ் (**குறிப்பு**.- உதவி பெறும் பாடசாலைகளின் ஒழுங்குத் திட்டத்தின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட பிறப்பு தொடர்பான ஞானஸ்ஞான சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) பட்டப்படிப்பு தொடர்பான, உயர்கல்வி தொடர்பான, தொழில்நுட்பக் கல்வி தொடர்பான சான்றிதழ்கள்.

(iii) நன்னடத்தை தொடர்பான இரண்டு சான்றிதழ்கள் இவற்றில் ஒன்று இயக்குநர் அல்லது கல்லூரி போதனாசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.

(iv) சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்பவற்றில் ஆகக்கூடிய பரீட்சையில் சித்தியெய்தியது தொடர்பான சான்றிதழ்.

**குறிப்பு**.- (i) இந்த விண்ணப்பப்படிவத்துடன் எந்தவிதமான ஆவணங்களோ அல்லது ஆவணங்களின் பிரதிகளோ இணைக்கக் கூடாது.

(ii) விண்ணப்பதாரிகள் கேட்கப்படும்பொழுது ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறுமிடத்து அவர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது.

7. அரச சேவை மாகாண கூட்டுத்தாபன சேவையில் உள்ளவர்களது விண்ணப்பங்கள் அவர்களின் நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பப்படல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் மற்றும் அவை தொடர்பான வேறு தொடர்புகளுக்கான கடிதங்கள் "செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சு, செயலகம், கொழும்பு 1" என்று விலாசமிடப்பட்டு இருக்க வேண்டும். உத்தியோகத்தர்கள் எவரினதும் சொந்தப் பெயருக்கு கடிதங்கள் அனுப்பக்கூடாது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கிணங்க,

செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
செயலகம்,
கொழும்பு 1,
17.06.2009.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை விலைமதிப்புச் சேவையின் வகுப்பு III தரம் II இன் உதவி மாவட்ட விலைமதிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2009**

**கவனத்திற்கொள்க**.- விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விலைமதிப்புத் திணைக்களத்தின் இலங்கை விலைமதிப்புச் சேவையின் வகுப்பு III தரம் II ஐச் சேர்ந்த உதவி மாவட்ட விலைமதிப்பாளர் பதவி" என்று குறிப்பிட வேண்டும். விண்ணப்பப்படிவங்களை பதிவுத்தபாலில் "செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சு, செயலகம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

☐
(அலுவலக உபயோகத்துக்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4 ☐
(உரிய இலக்கத்தைச் சதுரத்தில் குறிப்பிடுக.)

1. விண்ணப்பதாரியின் பெயர் :

1.1 முதலெழுத்துக்களுடனான பெயர் :———.
(முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிடுக.)
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் : உம் : SILVA. A. B.)

1.2 முழுப்பெயர் :———.
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

1.3 முழுப்பெயர் :———.
(தமிழில்/சிங்களத்தில்)

2. சொந்த முகவரி :———.
(தமிழில்/சிங்களத்தில்)
(முகவரி மாற்றமடையும் பட்சத்தில் உடனடியாக அறியத்தர வேண்டும்.)

பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :———.

3. பால் (ஆண்-0, பெண்-1) : ☐
(உரிய இலக்கத்தைச் சதுரத்தில் குறிப்பிடுக)

4. விவாகமானவரா, தனித்தவரா என்பது (தனித்தவர்-1, விவாக மானவர்-2)
☐
(உரிய இலக்கத்தைச் சதுரத்தில் குறிப்பிடுக)

5. இனம் (சிங்களம்-1, தமிழ்-2, இந்தியத் தமிழ்-3, முஸ்லிம்-4, ஏனையன-5) :
☐
(உரிய இலக்கத்தைச் சதுரத்தில் குறிப்பிடுக)

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

7. பிறந்த திகதி :

ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

8. நீங்கள் இலங்கைப் பிரசையாக இருப்பது பரம்பரையாகவா ? பதிவு செய்ததன் மூலமா என்பதைக் குறிப்பிடுக :———.
(பதிவுசெய்ததன் மூலமாயின் விபரங்களைக் குறிப்பிடுக)

9. கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் சித்தியடைந்துள்ள உயர் பரீட்சை :

1. சிங்களம் :———.
2. தமிழ் :———.
3. ஆங்கிலம் :———.

10. கல்வி/தொழில்சார் தகைமைகள் :

| பரீட்சை/பட்டம் | அமுலுக்கு வரும் திகதி | பல்கலைக்கழகம்/ நிறுவனம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

11. தற்போதைய தொழில் மற்றும் இதற்கு முன்னர் ஏதேனும் பதவியை வகித்திருப்பின் அதுபற்றிய விபரம் :———.

| பதவி | முதல் | வரை | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|
| | | | |

12. நீங்கள் அரசாங்க பதவியொன்றை வகித்து அதிலிருந்து நீக்கப் பட்டவரா ? :———.
(அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடுக)

13. உங்களுக்கு எதிராக (தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டிருப்பின்) திணைக்களத்தில் ஏதும் ஒழுக்காற்று விசாரணை உள்ளதா ? :———.

14. நீங்கள் ஏதேனுமொரு குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? :———.

15. **விண்ணப்பதாரரின் உறுதியுரை**.- இந்த விண்ணப்பப்படிவத்தில் நான் வழங்கியுள்ள அனைத்து தகவல்களும் உண்மையானதும், சரியானதுமென்று இத்தால் உறுதி செய்கின்றேன். இதில் உள்ளடங்கும் ஏதேனும் தகவல்கள் தவறானது அல்லது உண்மைக்கு மாறானது என்பது நான் தெரிவுசெய்யப்பட முன்னர் அறியவரும் பட்சத்தில் நான் தகைமையற்றவராக இடமுண்டு என்பதையும் நியமனம் செய்யப்பட்ட பின்னர் அதுபற்றி அறியவரும் பட்சத்தில் எந்தவொரு நட்டஈடும் செலுத்தாது நான் சேவை நீக்கம் செய்யப்பட முடியுமென்பதையும் அறிவேன்.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :———.

16. **விண்ணப்பதாரர் அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில்/அரச கூட்டுத்தாபன சேவையில் ஈடுபட்டிருப்பின் நிறுவனத் தலைவரின் விதப்புரை :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ..................................... என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிந்துள்ளேன் என்றும், அவர் ................................. ............... அமைச்சில்/திணைக்களத்தில்/அரச கூட்டுத் தாபனத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளார் என்றும் அவருக்கு எதிராக எந்தவொரு ஒழுக்காற்று விசாரணைகளும் இடம்பெற வில்லை என்றும் அவர் ...................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் உறுதி செய்கின்றேன்.

அவரை இலங்கை விலைமதிப்புச் சேவையின் வகுப்பு III தரம் II இன் உதவி மாவட்ட விலைமதிப்பாளர் II பதவிக்கு நியமனம் செய்வதற்கு தெரிவு செய்யப்படுவாராயின் இத்திணைக்கள/கூட்டுத்தாபன சேவையிலிருந்து விடுவிக்க முடியும்.

———,
உறுதிசெய்பவரின் கையொப்பம்.

உறுதிசெய்பவரின் முழுப்பெயர் :———.
பதவி :———.
அலுவலக முகவரி :———.
(உத்தியோகபூர்வ முத்திரையைப் பதிக்கவும்)
திகதி :———.

7-82

**கல்வி, உயர் கல்வி அமைச்சு**

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்
(SLIATE)

**உயர் தொழில்நுட்ப நிறுவனம் - கொழும்பு 15**

*பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDE) பாடநெறிகளுக்கு மாணவர் அனுமதி கல்வியாண்டு - 2009/2010*

மேற்காணும் பாடநெறிக்கு பிரவேசிப்பதற்காக பொருத்தமான தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா கோட்பாடு மூலமான (Theory) மூன்று ஆண்டுகால பயிற்சியினையும், ஆறு மாத காலத்தினைக் கொண்ட பொறித்தொகுதி பயிற்சியினையும் உள்ளடக்கிய முழு நேர ஆங்கில மொழி மூல பாடநெறியாகும். குடிசார், மின்சார மற்றும் இயந்திரப் பொறியியல் ஆகிய மூன்று விசேட துறைகளை இப்பாடநெறி உள்ளடக்கியதாகும். உயர் தேசிய பொறியியல் பாடநெறிக்கான சான்றிதழானது லண்டன் பொறியியல் கழகத்தின் CEI (லண்டன்) பரீட்சையின் முதலாம் கட்டத்திலிருந்து (Part one) விதிவிலக்களிக்கப் படுவதற்கான தகைமையினைக் கொண்டுள்ளதுடன் இலங்கை பொறியியல் நிறுவனத்தின் முதலாம் (Part one) பரீட்சையிலிருந்தும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தென் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தின் (University of South Australia) நான்கு வருட பொறியியல் பாடநெறி (B. Sc.) உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறிச் சான்றிதழின் தகைமைகளை பின்வரும் மதிப்பீடுகளுக்கு உள்ளடக்கியுள்ளது :

(1) இயந்திரப் பொறியியல் துறைக்கு - 02 வருடங்கள் விடுவிப்பும்,
(2) சிவில் பொறியியல் துறைக்கு - 02 வருடங்கள் விடுவிப்பும்,
(3) மின் பொறியியல் துறைக்கு - 1 1/2 வருடங்களுக்கான விடுவிப்பும் வழங்கப்படும்.

ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த சில முதற்தர பல்கலைக்கழகங்கள், உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறிச் சான்றிதழினை முடித்தவர்களுக்கு, முடிந்த ஒரு வருடத்திற்குள் தங்களது பொறியியல் பாடநெறியைக் (B.Sc.) கற்பதற்கு IELTS பரீட்சையிலிருந்து விலக்கையும் (Exemption) அவர்களது பாடநெறி முடிவில் 2 வருடங்கள் வேலை செய்வதற்கான அனுமதியையும் (Work Permit) அளிக்க முன்வந்துள்ளன.

ஆஸ்திரிய, நெதர்லாந்து அரசாங்கங்களின் உதவியுடன் HNDE பாடநெறிக்கான பாடவிதானங்களும் பௌதீக வளங்களும் தரமுயர்த்தப்படுகின்றன.

பாடநெறிக்கென சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு விண்ணப்ப தாரிகள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் :-

(1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளரினால் 2008 இல் அல்லது அதற்கு முன்னர் நடத்தப்பட்ட க. பொ. த. (உ/த) (புதிய பாடத்திட்டத்தில்) ஆகக் குறைந்தது இணைந்த கணிதம், பௌதிக விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒரே அமர்வில் மூன்று சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(3) க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 23 வயதிற்குக் குறைந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் கிழமை நாட்களில் வகுப்புக்களுக்கு சமுகமளிப்பதோடு தேவை ஏற்படும் பட்சத்தில் வார இறுதி நாட்களிலும் வகுப்புகளுக்கு சமுகமளித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தினை கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றனர். அந்தந்த பாடநெறிகளுக்கு தேர்ந்தெடுக்கப் படும் போது க. பொ. த. (உ/த) பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் அல்லது Z - Score கவனத்திற் கொள்ளப்படும்.

விண்ணப்பக் கட்டணம் விலை ரூபா 250 ஆகும். இக்கட்டணம் ஹை பார்க் கோணர் மக்கள் வங்கி, பார்க் வீதி கிளையில் அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் மக்கள் வங்கிக் கிளையில் நடைமுறைக் கணக்கு இல. 025100133397613 இற்கு வரவு வைத்து ரசீதை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவும். மேற்கூறப்பட்ட கணக்கிற்கு அன்றி வேறு கணக்கிற்கு வரவுவைக்கப்பட்ட பற்றுச்சீட்டுடன் கூடிய விண்ணப்பப்படிவம் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம், இல. 42, ரொட்சிகோ பிளேஸ், மட்டக்குளி, கொழும்பு 15" என்ற விலாசத்திற்கு 2009.07.24 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெரிய எழுத்துக்களில் "APPLICATION FOR ADMISSION TO HNDE COURSE 2009/2010" என எழுதுமாறு விண்ணப்பதாரிகள் வேண்டப்படுகின்றனர்.

இலங்கையிலுள்ள ஏதேனும் பல்கலைக்கழகத்தில்/இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியில்/தொழில்நுட்பக் கல்லூரியில், கல்வியியல் கல்லூரியில்/ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அல்லது ஏதேனும் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் உள்ளக மாணவராக பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்கள் அல்லது இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் உள்ளக மாணவராக பாடநெறியைப் பின்பற்றுகின்ற மாணவர்கள், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் முழுநேர மாணவராக பதிவு செய்து கொள்ளப்படுவதற்கு தகுதிபெற மாட்டார்கள். எவரேனும் ஒரு மாணவர் ஒரே சமயத்தில் மேலே குறிப்பிட்டுள்ள ஏதேனும் அரச நிறுவனம் ஒன்றில் முழுநேர பாடநெறியைத் தொடருபவர் என அறியவருமிடத்து அவரது பதிவு இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் உடனடியாக இரத்துச் செய்யப்படும் என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

மட்டக்குளிய உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் பொறியியல் துறைக்கு 2009/2010 கல்வியாண்டிற்கு சேர்த்துக்கொள்ளப்படுவது தொடர்பாக இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மேற்கொள்ளும் தீர்மானமே இறுதியானதாகும் என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

எச். டீ. கமல் பத்மசிறி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,
இல. 18/2, வோர்ட் பிளேஸ்,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (SLIATE)**

உயர் தொழில்நுட்ப நிறுவனம் - கொழும்பு 15

***பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDE) பாடநெறிக்கு மாணவர்கள் அனுமதி கல்வியாண்டு - 2009/2010***

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :

2. முதலெழுத்துக்கள் குறிக்கின்ற பெயர்கள் :

3. தேசிய அடையாள அட்டை இல. :

4. பிறந்த திகதி :

5. பால் : ஆண்/பெண்

6. நிரந்தர விலாசம் : (கீழேயுள்ள பெட்டியுனுள்)

7. நிர்வாக மாவட்டம் :

8. முன்னுரிமை பொறியியல்துறை :

| | |
|---|---|
| 1 ஆவது முன்னுரிமை | |
| 2 ஆவது முன்னுரிமை | |
| 3 ஆவது முன்னுரிமை | |

9. க. பொ. த. (சா. த.) இல் ஆங்கில மொழிக்கான பெறுபேறு :

| ஆண்டு | சுட்டிலக்கம் | தரம் |
|---|---|---|
| | | |

10. (2008 இல் அல்லது அதற்கு முன்னர் க. பொ. த. (உ/த) பரீட்சையில் சிறந்த முயற்சியிலான பெறுபேறு :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. இணை கணிதம் | |
| 2. பௌதீகம் | |
| 3. இரசாயனம் | |
| 4. பொதுவான பொதுப் பரீட்சை | |
| **Z-score** | |

11.

| ஆண்டு | சுட்டிலக்கம் | மொழிமூலம் |
|---|---|---|
| | | |

| முயற்சி | 1 ஆவது | | 2 ஆவது | | 3 ஆவது | |
|---|---|---|---|---|---|---|

வேறு எந்தவொரு அரச நிறுவனத்திலும் வேறு எந்த முழுநேரப் பாடநெறியையும் நான் பின்தொடர்வதில்லை என இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன். ஏனைய எந்தவொரு அரச நிறுவனத்திலும் ஒரே சமயத்தில் முழுநேரப் பாடநெறியைப் பின்தொடர்வதனைக் கண்டுபிடிக்கப்படுமிடத்து கற்கின்ற காலப்பகுதியில் எந்த நேரத்திலும் எனது பதிவு இரத்துச்செய்யப்படும் என்பதை நான் அறிவேன். மேலும் எனது அறிவுக்கு எட்டியவரை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல் உண்மையெனவும் சரியெனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

(ரூபா 250 க்கான வங்கி ரசீது இணைக்கப்படல் வேண்டும்.)

7-160

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2009 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை – 2009**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 03.07.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.06.2009 |
| | | வெள்ளி | 10.07.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.06.2009 |
| | | வெள்ளி | 17.07.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.07.2009 |
| | | வெள்ளி | 24.07.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.07.2009 |
| | | வெள்ளி | 31.07.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.07.2009 |
| **ஒகத்து** | .. | வெள்ளி | 07.08.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.07.2009 |
| | | வெள்ளி | 14.08.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.07.2009 |
| | | வெள்ளி | 21.08.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.08.2009 |
| | | வெள்ளி | 28.08.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.08.2009 |
| **செத்தெம்பர்** | .. | வியாழன் | 03.09.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.08.2009 |
| | | வெள்ளி | 11.09.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.08.2009 |
| | | வெள்ளி | 18.09.2009 | .. | நண்பகல் 12 | வியாழன் | 03.09.2009 |
| | | வெள்ளி | 25.09.2009 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.09.2009 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.